**கிராமின் கிருஷி மவுசம் சேவா**
இந்திய வானிலை துறை
தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்
கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 16-05-2023**

**புதுக்கோட்டை(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-05-16 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-05-17 | 2023-05-18 | 2023-05-19 | 2023-05-20 | 2023-05-21 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 0.0 | 0.0 | 0.0 | 2.0 | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 40.0 | 41.0 | 42.0 | 42.0 | 42.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 28.0 | 29.0 | 29.0 | 30.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 70 | 70 | 60 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 20 | 20 | 20 | 20 | 30 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 12 | 8 | 10 | 12 |
| காற்றின் திசை (கோணம்) | 200 | 180 | 180 | 180 | 200 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 4 | 3 | 2 | 1 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்ப நிலை 40.0°C - 42.0°C எனும் வேறுபாட்டிலும், குறைந்தபட்ச வெப்ப நிலை 28.0°C - 30.0°C இருக்கும். பொதுவாக வானம் மேகமூட்டத்துடன் காணப்படும் . காற்றின் வேகம் மணிக்கு 08- 12 கிலோமீட்டர் வேகம் இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

## பொது ஆலோசனை:

விரிவாக்கப்பட்ட வரம்பு மழை முன்னறிவிப்பு : மே 21 முதல் மே 27 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாடுட்டில்இயல்பானது மழை பெய்ய வாய்ப்பு உள்ளது . அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பானது இருக்கும்

## குறுஞ்செய்தி :

நடவு செய்யப்பட்ட பழ வகை மரங்கள், மர வாசனை பயிர்கள் மற்றும் தோட்டக்கலை பயிர் களுக்கு போதிய அளவு மழை இல்லாத்தால் மண்ணின் ஈரம் கருத்தில் கொண்டு பயிர்களுக்கு நீர் பாய்ச்சவும்.

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நிலக்கடலை | நடப்பு வைகாசிப்பட்டம் நிலக்கடலை கோ -7 மற்றும் தரணி இரக்கத்தை தேர்வு செய்து விதைக்கலாம் மேலும் விதைக்கும் டிரைகோடெர்மா விரிடியை முன் என்ற பூஞ்சான கொல்லியுடன் 4 கிராம் / ஒரு கிலோ விதைக்கு விதை நேர்த்தி விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். |
| மக்காச்சோளம் | தற்போது மக்காசோளம் நடவு செய்துள்ள விவசாயிகள் 1 ஏக்கருக்கு 5 கிலோ சிறுதானிய நுண்ணூட்டம் அல்லது 10 கிலோஸிங்க்சல்பேட் உரத்தினை கொடுப்பதன் மூலம் நுண்ணூட்டசத்து குறைபாட்டை நிவர்த்திசெய்யலாம். மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஒரு ஏக்கருக்கு 2கிலோ அசோஸ்பைரில்லம் 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை கலந்து இடவேண்டும். |
| மல்லி கை | பூக்கும் பருவத்தில் உள்ள மல்லிகை செடியில் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்த டிரிஃப்ளோக்ஸிஸ்ட்ரோபின் + டெபுகோனசோல் @ 0.75 கிராம்/லிட்டர் மருந்தை 0.75 கிராம் / லிட்டர் என்ற அளவில் அல்லது டிஃபெனோகோனசோல் என்ற மருந்தை 0.5 கி என்ற அளவில் தெளிக்கவும். |

## தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பப்பாளி | நிலவும் வறண்ட வானிலையியால் மரவள்ளி கிழங்கு மற்றும் பப்பாளியில் மாவுப்பூச்சி வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் அதை கண்காணிக்கவும் . தேவைப்பட்டால் 2 சத வேப்ப எண்ணெய் 5 சத வேப்பங்கொட்டை சாறு ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரோபினோபாஸ் என்ற மருந்தையும் பயன்படுத்தலாம். |
| கத்திரிக்காய் | காய்கறி பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் சூரிய விளக்குப்பொறி , ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்லகயில் இனக்கவர்ச்சி பொறி மற்றும் ஏக்கருக்கு 8 என்ற எண்ணிக்லகயில் மஞ்சள் நிற ஒட்டும் அட்டை பொறிகளை பயன்படுத்தலாம். |
| தக்காளி | தக்காளி பயிரில் உயர் மகசூலை பெற ஒரு எக்டருக்கு 325 கிலோ என்ற அளவில் யூரியா மற்றும் 250 கிலோ என்ற அளவில் பொட்டாஷ் இவற்றை மூன்று சமமான அளவுகளில் முறையே நடவுசெய்த 30வது, 45வது, மற்றும் 60 வது நாட்களில் மேலுரமாக அளிக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது . |
| தென்னை | தற்போது பெய்துள்ள மழையின் காரணமாக மண்ணில் காணப்படுகின்ற ஈரப்பதத்தினை பயன்படுத்தி தென்னைக்கு நுண்ணுயிர் உரம் இடுதல் நல்ல பலனை கொடுக்கும். |

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | ஆகையால் விவசாயிகள், தென்னை மரம் ஒன்றிற்கு 50 கிராம் அஸோஸ்பைரில்லம், 50 கிராம் பாஸ்போபாக்டீரியா உடன் 50 கிராம் (வேம்) வேர் உட்பூசணத்தை தேவையான அளவு கம்போஸ்ட் அல்லது மக்கியத் தொழு உரத்துடன் கலந்து இளம் வேர்களில் படும்படி இடவேண்டும். மீண்டும் இதனை 6 மாத இடைவெளியில் தொடர்ந்து செய்தால் தென்னை சாகுபடியில் நல்ல பலனைப் பெறலாம். இராசயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளோடு உயிர் உரங்களை கலந்து வைக்கக்கூடாது. |

## உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| பசு | கால்நடை வளர்க்கும் விவசாயிகள் தங்களின் ஆடுகளுக்கு உருளை மற்றும் நாடாப்புழுக்கள் குடற்புழுக்கான மருந்தினை மே மற்றும் ஜூன் மாதத்தில் அளிக்கலாம் . குடற்புழு நீக்க மருந்துகளை அதிகாலை வேலையில் ஆடுகளுக்கு வேறும் வயிற்றில் கொடுக்க வேண்டும். |
| வெள்ளாடு | நிகழும் தட்பவெப்ப சூழ்நிலையின் காரணமாக ஆடுகளை ஆட்டுகொல்லி நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. இதனை தவிர்க்க ஜூன் மாதத்தில் விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி தங்களது ஆடுகளுக்கு ஆட்டுக்கொல்லி எனப்படும் பிபிஆர் நோய்க்கான தடுப்பூசி மருந்தினை போட்டுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். |